**சென்னையில், முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான காஸா கிராண்டே, கோவையில் தனித்துவம் வாய்ந்த வில்லா திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது.**

நிர்வாக இயக்குனர் அருண்குமார் கூறுகையில், ''சென்னையை தளமாக கொண்டு, 2004ம் ஆண்டு கட்டடத் துறையில் நுழைந்து, இதுவரை 24 குடியிருப்பு திட்டங்களின் கீழ், 1.2 மில்லியன் சதுரடி கட்டப்பட்டுள்ளது; ஆயிரத்துக்கும் மேற்பட்டோரின் விருப்பம் பூர்த்தியாகியுள்ளது. தரம், வெளிப்படை, நேர்மை மற்றும் ஆர்வத்துடன் செயல்படும் நோக்கில், காஸா கிராண்ட் செயல்படுகிறது. ஒரு விற்பனை என்றில்லாமல், வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து சேவை அளிக்கப்படுகிறது. வரும் நிதியாண்டில் 50 கோடி, அதற்கு பின் 200 கோடிக்கும் அதிகமான திட்டங்களை அறிமுகம் செய்ய உள்ளோம்,'' என்றார்.

நிர்வாக பங்குதாரர் செந்தில்குமார் கூறுகையில், ''இரண்டு ஆண்டுகளாக, கோவையில் ஆய்வு செய்யப்பட்டு, வில்லா மற்றும் வரிசை வீடுகள் உருவாக்கப்படுகின்றன. அவிநாசி சாலை விமான நிலையம் சிக்னலில் இருந்து 7 கி.மீ., துாரத்தில், புதிய வில்லா திட்டம் துவங்குகிறது. மூன்று பெட்ரூம் கொண்ட பாதி தனி வில்லா, நான்கு பெட்ரூம் கொண்ட தனி வில்லாக்கள், 1,600 முதல் 2,000 சதுரடியில் கட்டப்படுகின்றன. வில்லாக்களின் விலை 50 லட்சம் முதல் 70 லட்சம் ரூபாய் வரை இருக்கின்றன. கிளப் ஹவுஸ், விருந்தினர் அறை, ஹெல்த் கிளப், நீச்சல் குளம் போன்ற வசதிகளும் உள்ளன. வரும் ஜூன் மாதத்தில், வில்லா திட்டம் துவக்கப்பட்டு, அடுத்த 12 முதல் 18 மாதங்களில் நிறைவடையும்,'' என்றார்.

## கோவையில் அறிமுகமாகும் வில்லா திட்டம்